பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2052 மாசி 26 புதன்கிழமை 10.03.2021 கதிர் 356

## சுருட்டுப்பத்திய வயோதிபர் தீயில் எரிந்து பரிதாபச் சாவு

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பகுதியைச் சேர்ந்த வயோதிபர் ஒருவர் தீயில் எரிந்து காயமடைந்திருந்த நிலையில் நேற்று இறந்துள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது -

கடந்த 6ஆம் திகதி குறித்த வயோதிபர் சுருட்டுப் பத்தியுள்ளார்.

2

# கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் ரி.ஐ.டி. விசாரணைக்கு அழைப்பு



## எதிர்த்து சபையில் இன்று போராட்டம்; கண்டனத் தீர்மானமும் நிறைவேற்றம்

**கரைச்சி பிரதேச சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் நாகேந்திரம் செல்வநாயகத்தைப் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் விசாரணைக்கு அழைத்தமையைக் கண்டித்து பிரதேச சபை அமர்வில் அமைதிவழிப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.**

**கரைச்சி பிரதேச சபை அமர்வு இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமானபோதே சபையின் உறுப்பினர்களால் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.**

2

### ஆயிரம் ரூபா நாள் சம்பளம்:

## இழுத்தடிப்புக்கு மத்தியில் வெளியானது வர்த்தமானி

### வேலை நாள்களுக்கு உத்தரவாதம் இல்லை

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு மார்ச் 5 ஆம் திகதி முதல் குறைந்தபட்ச நாள் சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும் என்பது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி அடிப்படை நாள் சம்பளமாக 900 ரூபாயாகவும், வரவு - செலவுத்திட்ட சலுகைக் கொடுப்பனவாக 100 ரூபாயாகவும் சேர்த்து நாளாந்த சம்பளம் 1,000 ரூபா

2

## காரைநகர்க்கடலில் படகில் இருவர் 141 கிலோ கஞ்சாவுடன் சிக்கினர்!





(ந.லோகதயாளன்)


யாழ்ப்பாணம்,மார்.10

இந்தியாவில் இருந்து எடுத்து வரப்பட்டிருக்கலாம் என நம்பப்படும் 141 கிலோ கேரளக் கஞ்சாவுடன் இருவர் காரைநகரில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காரைநகர் கடற்பரப்பில் சந்தேகத்திற்கு இடமாக நடமாடிய படகினை சோதனை செய்த

2

## ஜே.சி.பி. - மோ.சைக்கிள் விபத்து கிளிநொச்சியில் ஒருவர் உயிரிழப்பு



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,மார்.10

கிளிநொச்சியில் ஜே.சி.பி. வாகனம் - மோட்டார் சைக்கிள் மோதி இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று தரும்புரம் பொலிஸார் தெரிவித்தனர்.

2

## இரு மன்னார் மீனவர்கள் தனுஷ்கோடியில் கைது!



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,மார்.11

இந்திய எல்லைக்குள் அத்துமீறிப் பிரவேசித்ததாகத் தெரிவித்து மன்னாரைச் சேர்ந்த இரு மீனவர்கள் இந்தியக் கரையோர காவல்படையினரால் இன்று காலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் பதிவுள்ள 3770 இலக்கமுடைய படகில் பயணித்த இருவர் மீன் பிடித்தபோது எல்லை தாண்டி தனுஷ்கோடி

2

## 38 கைத்துப்பாக்கிகளுடன் கொழும்பில் ஒருவர் கைது!



கொழும்பு, மாளிகாவத்தை பகுதியில் 38 கைத்துப்பாக்கிகளை வைத்திருந்த குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

2

## 20க்கும் அதிகமானோருக்கு யாழில் இன்றும் கொரோனா

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,மார்.10

வடக்கில் இன்றும் இருபதுக்கும் மேற்பட்டவர்களிற்கு கொரோனாத் தொற்று இருப்பது

2

## 2024 ஜனாதிபதித் தேர்தலில் ஆளுங்கட்சி வேட்பாளர் யார்?

ஜனாதிபதித்தேர்தலுக்குஇன்னும்மூன்றுஆண்டுகளுக்கு மேலான காலப்பகுதி எஞ்சியிருந்தாலும், பிரதான அரசியல் கட்சிகள் அந்தத் தேர்தல் தொடர்பிலும் தமது பார்வையை செலுத்தியுள்ளன. குறிப்பாக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, பரந்துபட்ட கூட்டணி அமைத்து களமிறங்கினாலும் வேட்பாளர் சஜித் பிரேமதாஸதான் என உறுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், ஆளுங்கட்சியின் வேட்பாளர் யார்

2

## யாழ். பல்கலையில் மும்முரமாக தொற்று நீக்கும் பணி ஆரம்பம்!

### பலர் சோதனை, தனிமைப்படுத்தல்





யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் மாணவ ஒழுக்காற்று அதிகாரிகளில் ஒருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் தொற்றுப் பரவலைத் தடுப்பதற்கான மேலதிக முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்படுகின்றது.

தொற்று அடையாளப்படுத்தப்பட்டதை அடுத்து, நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் வழிகாட்டல்களுக்கு அமைய, பல்கலைக்கழக கொவிட் - 19 தொற்றுப் பரவல் தடுப்புச் செயலணி தொற்றுப் பரவலைத் தடுப்பதற்கான

2

## விமலுக்கு எதிராக ரிஷாத் முறைப்பாடு



உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சூத்திரதாரி சஹ்ரானையும் தன்னையும் தொடர்புபடுத்தி, அமைச்சர் விமல் வீரவன்ஸ வேண்டுமென்றே தெரிவித்த பொய்யான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில், இன்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் முறைப்பாடொன்றைச் செய்துள்ளேன். இது தொடர்பில் அவரை விசாரணை செய்து, உண்மைநிலையை வெளிப்படுத்துமாறு சி.ஐ.டியினரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளேன்.

- இவ்வாறு அகில இலங்கை மக்கள்

2

## ஜே.சி.பி. - மோ.சைக்கிள் விபத்து ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கிளிநொச்சி தரும்புரம் 7ஆம் யுனிட் பகுதியில் இன்று பிற்பகல் நடந்த இந்த விபத்தில் அதிசயவிநாயகர் கோவிலடி, விஸ்வமடுவைச் சேர்ந்த குணராசா - ஜெனோசன் (வயது 20) என்பவரே பரிதாபகரமாக உயிரிழந்தார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போதும் உயிரிழுந்தார் என்று பொலிஸார் கூறினர்.

சம்பவம் தொடர்பில் தருமபுரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## காரைநகர்க் கடலில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கடற்படையினர் அதில் 141 கிலோ கஞ்சா பொதிகள் இருப்பதை அவதானித்து இருவரையும் கைது செய்தமையோடு கஞ்சாவையும் மீட்டனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் கஞ்சா பொதிகளுடன் ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர்.

இதேநேரம் இவ்வாறு கைது செய்யப்பட்ட இருவரும் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## இழுத்தடிப்புக்கு மத்தி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வழங்கப்படவுள்ளது.

ஆனாலும் வேலை நாள்கள் தொடர்பில் எதுவும் அறிவிக்கப்படவில்லை.

கூட்டு ஒப்பந்தத்தின் பிரகாரம் வருடம் 300நாள்கள்வேலைவழங்கப்படவேண்டும். ஆனால், கூட்டு ஒப்பந்தத்திலிருந்து வெளியேறுவதாக கம்பனிகள் அறிவித்துள்ளன. சம்பளம் வழங்கக்கூடிய அளவுக்கே வேலை வழங்கப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளன.

மாதம் 13 அல்லது 15 நாள்கள் வேலை வழங்குவதே கம்பனிகளின் திட்டமாக உள்ளது. அவ்வாறுநடைபெற்றால் அது தொழிலாளர்களுக்கு பெரும் பாதிப்பாக அமையும். ஏற்கனவே பெற்ற சம்பளத்தைவிடவும் குறைந்தளவான தொகையையே பெறவேண்டிவரும்.

எனினும், விசேட சட்டத்தை தொழில் அமைச்சு இயற்றும் பட்சத்திலோ அல்லது புதியதொரு உடன்படிக்கைகைச்சாத்திடும்பட்சத்திலோ தொழில் சலுகைகள் மற்றும் உரிமைகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான சாத்தியம் காணப்படுகின்றது.

## கரைச்சி பிரதேச சபை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யாரையும் விசாரணைக்கு உட்படுத்துவதற்குத் தாம் தடையாக இல்லை எனவும், அவ்வாறு விசாரணைக்கு உட்படுத்துவதாயின் கிளிநொச்சி மாவட்டத்திலேயே விசாரணை செய்ய வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து குறித்த போராட்டத்தை முன்னெடுப்பதற்காக சபை உறுப்பினர் ஜீவராசா சபையிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்ட நிலையில் அனைத்து உறுப்பினர்களும்ஆதரவுதெரிவித்ததை அடுத்து சபை 5 நிமிடங்கள் ஒத்திவைக்கப்பட்டது.

கரைச்சி பிரதேச சபையின் உறுப்பினரான நாகேந்திரம் செல்வநாயகம் இன்று கொழும்பில் உள்ள பயங்கரவாத தடுப்புப் பிரிவுக்கு விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளார் எனவும், குறித்த செயற்பாடானது மக்கள் பிரதிநிதிகளை அச்சுறுத்தும் வகையில் அமைந்துள்ளது எனவும் தெரிவித்து இன்றைய அமர்வில் பிரேரணையும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

குறித்த பிரேரணை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இன்று குறித்த பிரதேச சபை உறுப்பினர் விசேட விடுமுறை பெற்று விசாரணைகளுக்காகச் சென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சுருட்டுப்பத்திய .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதன்போது தவறுதலாக அவரது சாரத்தில் தீப்பற்றியுள்ளது.

இதனால் படுகாயமடைந்த அவர் மீட்கப்பட்டு வவுனியா பொது வைத்தியசாலையில்சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார். எனினும், சிகிச்சை பலனின்றி அவர் அங்கு இறந்துள்ளார்.

சம்பவத்தில் சங்கரப்பிள்ளை வேதாரணியம் (வயது 79) என்ற வயோதிபரே இறந்துள்ளார். அவர் சிலகாலங்களாக மனநிலை பாதிக்கப்பட்டிருந்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## இரு மன்னார் மீனவர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பகுதிக்குள் நுழைந்தனர் என்ற குற்றச்சாட்டிலேயே இந்த இலங்கை மீனவர்கள் இரண்டு பேரையும் இந்திய கடலோர காவல் படையினர் கைது செய்து தற்போது தீவிர விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர்.

கடலோர காவல் படையினரால் மேற்கொள்ளப்படும் விசாரணையைத் தொடர்ந்து கைதுசெய்யப்பட்ட இரு மன்னார் மீனவர்களும் மரைன் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மன்னார் மாவட்டம், பேசாலை 8 ஆம்வட்டாரத்தைச் சேர்ந்த அருள் குரூஸ் மற்றும் ரேகன் பாய்வா ஆகியோரே கைது செய்யப்பட்ட இருவருமாவர்.

## 20க்கும் அதிக .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கண்டறியப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் இன்று 300 இற்கும் மேற்பட்டோருக்கு பி.சி.ஆர். கொரோனாப் பரிசோதனை இடம்பெற்றது. இதிலேயே 20ற்கும் மேற்பட்டவர்களிற்கு கொரோனாத் தொற்று இனம் காணப்பட்டுள்ளது.

யாழ் பல்கலைக்கழகத்தில் கொரோனாத் தொற்று இனம் காணப்பட்ட உத்தியோகத்தரின் குடும்பத்தைச் சேர்ந்த இருவருக்கும் இன்று தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

## 2024 ஜனாதிபதித் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
என்பது தொடர்பில்தான் பல கோணங்களில் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கை அரசமைப்பின் பிரகாரம் நபரொருவர் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியை இரு தடவைகள் வகிக்கலாம். அந்தவகையில் 2024 ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு தற்போதைய ஜனாதிபதிக்கு வாய்ப்பு இருந்தாலும், அவர் போட்டியிடமாட்டார் என அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

பங்காளிக்கட்சி தலைவர்கள் சிலருடன் அண்மையில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலொன்றின்போது, அடுத்த தேர்தலில் தான் போட்டியிடமாட்டார் எனவும், பொருத்தமான வேட்பாளர் ஒருவரை தயார்படுத்துமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார் எனவும் கொழும்பு அரசியல் களத்தில் பரபரப்பாக பேசப்படுகின்றது.

இலங்கை அரசியலில் புரட்சியை ஏற்படுத்தி புதியதொரு அரசியல் கலாசாரத்தை ஏற்படுத்துவதே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இலக்காக இருக்கின்றது. எனினும், அதனை நோக்கி பயணிப்பதற்கு பல தடைகள் இருப்பதாலும், மேலும் சில காரணங்களாலுமே ஜனாதிபதி இவ்வாறானதொரு அறிவிப்பை விடுத்திருக்க கூடும் என ஊகம் வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி வேட்பாளராக கோட்டாபய ராஜபக்ஷ களமிறங்காவிட்டால், பஸில் ராஜபக்ஷவே போட்டியிடுவார் எனவும் கூறப்படுகின்றது. எனினும், புதிய அரசமைப்பின் ஊடாக எத்தகைய மாற்றங்கள் ஏற்படும் என்பதனை அடிப்படையாகக்கொண்டே ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஆளுங்கட்சியில் இறுதி முடிவு எடுக்கப்படக்கூடும்.

## 38 கைத்துப்பாக்கி .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் 34 வயதுடையவர் என்றும், அவரிடமிருந்து 2 கிராம் ஹெரோயினும், 18 கிராம் ஐஸ் மற்றும் 10 கிராம் கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## விமலுக்கு எதிராக .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

ரிஷாத் பதியுதீனின் சகோதரர், ஈஸ்டர் தற்கொலை குண்டுதாரி சஹ்ரானுக்கு தொலைபேசி அழைப்பை மேற்கொண்டுள்ளார். அந்த அழைப்பின் பின்னர், அவர் தனது சகோதரரான ரிஷாத் பதியுதீனுக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தியுள்ளார். அதன் பின்னர் மீண்டும் அவர் சஹ்ரானுக்கு அழைப்பை மேற்கொண்டுள்ளார். இந்த விடயத்தை பொலிஸார் எம்மிடம் தெரிவிக்கவில்லை. மதிப்புக்குரிய கர்தினாலிடமே தெரியப்படுத்தியுள்ளனர். அவரது சகோதரர் கைதானபோது, அவர் இதனை வியாபார ரீதியிலான தொலைபேசி அழைப்பு என்று கூறியுள்ளார்' என அமைச்சர் விமல் வீரவன்ஸ நேற்று நடைபெற்ற 'இஸ்லாமிய அடிப்படைவாதம்: உயிர்த்த ஞாயிறு ஆணைக்குழுக்கு அப்பால் - பொது பிரச்சாரம்' என்ற நிகழ்வில் தெரிவித்திருந்தார்.

இதையடுத்து விமலுக்கு எதிராக சி.ஐ.டியினரிடம் இன்று முறைப்பாடொன்றைக் கையளித்த பின்னர், ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் கூறியதாவது -

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் நடைபெற்றதிலிருந்து, விமல் வீரவன்ஸ என்னைப் பற்றி மிகவும் மோசமான, பொய்யான குற்றச்சாட்டுக்களை கட்டவிழ்த்து வருகின்றார். நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிலும், சி.ஐ.டியினரின் விசாரணைகளிலும் என் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அனைத்துமே பொய்யென நிரூபிக்கப்பட்டுள்ளன.

அத்துடன், அண்மையில் வெளிவந்துள்ள ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையிலும், எனக்கும் இந்தத் தாக்குதல் சம்பவத்துக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் என்னைப் பற்றி விமல் வீரவன்ஸ பல்வேறு குற்றச்சாட்டுக்களை சுமத்தி வந்தார். அத்துடன், என் மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படாத பட்சத்தில், தான் அரசியலில் இருந்து வெளியேறுவதாகவும் சூளுரைத்தார். எனவே, அவர் இந்தச் சந்தர்ப்பத்தில், அரசியலில் இருந்து வெளியேறி, தான் கூறியதை செயலில் காட்ட வேண்டும். தவிர நேற்று மாலை மீண்டும் ஒரு பெரிய பொய்யை கூறியுள்ளார். எனவே தான் இன்று அதற்கெதிராக முறைப்பாடு செய்துள்ளேன். அதுமாத்திரமின்றி, எனது சட்டத்தரணி ஊடாக விமலுக்கு சட்ட நடவடிக்கை எடுப்பதற்குத் தயாராகி வருகின்றேன்.

விமலின் பேச்சுக்கள் அப்பட்டமான பொய்யாகும். இதுவரை காலமும் கூறியது போன்றே இப்போதும் கூறியுள்ளார். சஹ்ரானை எந்தக் காலத்திலும் நான் சந்திக்கவில்லை. அதேபோன்று, எனது சகோதரரும் சந்திக்கவுமில்லை, பேசவுமில்லை. அவருக்கும் எங்களுக்கும் இடையிலே எந்தத் தொடர்பும் கிடையாது.

இதைத்தான் நான் அன்றும் சொன்னேன், இன்றும் சொல்கின்றேன். இவ்வாறான அபாண்டங்களை கூறி வரும் விமல் பற்றி எல்லோருக்கும் தெரியும். அவரது தனிப்பட்ட வாழ்க்கையைப் பற்றி விமர்சிப்பதற்கு எனக்கு விருப்பமில்லை. ஆனால், அவருக்கு இரண்டு பிறந்த தினம், இரண்டு அடையாள அட்டைகள், இரண்டு கடவுச்சீட்டுக்கள். இலங்கையில் இவ்வாறு எவருக்குமே இல்லை. அவ்வாறானவர்தான் இந்த விமல்.

நாட்டு மக்களிடம் ஒன்றைக் கூற விரும்புகின்றேன். விமல் வீரவன்ஸ, தனது அரசியல் இருப்புக்காகவே இவ்வாறு செய்கின்றார். என் மீதான குற்றச்சாட்டுக்களை நிரூபிக்குமாறு விமலிடம் சவால் விடுகின்றேன். அத்துடன், எனது முறைப்பாட்டை சி.ஐ.டி. விசாரணை செய்ய வேண்டுமெனவும் நான் எதிர்பார்க்கின்றேன் -என்றார்.

'உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் பின்னர், சந்தேக நபர் ஒருவரை விடுவிக்குமாறு இராணுவத் தளபதிக்கு அழுத்தம் கொடுத்ததாக, உங்கள் மீது குற்றச்சாட்டொன்று இருக்கின்றதே' என்ற ஊடகவியலாளரின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த ரிஷாத் பதியுதீன் எம்.பி.,

நான் அவருக்கு எந்த அழுத்தமும் கொடுக்கவில்லை. எனது மாவட்டத்தைச் சேர்ந்த மொய்னுதீன் என்பவரின் மகன் ஒருவரை முகமூடி அணிந்தவர்கள், அவரது வீட்டுக்கு வந்து கொண்டு சென்றனர் எனவும், அவர் எங்கு இருக்கின்றார் என்பது தொடர்பில் அறிந்து கூறுமாறும் அவரது குடும்பத்தார் என்னிடம் வேண்டினர். நான் இது தொடர்பாக பொலிஸ் உயர் அதிகாரிகள் பலருடன் தொடர்பு கொண்டு தகவல்களைப் பெறமுடியாது போகவே, முன்னாள் இராணுவத் தளபதியிடம் தொலைபேசியில் விசாரித்தேன். அதுவும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் விக்கிரமசிங்க, தங்களிடம் அவ்வாறான ஒரு நபர் இல்லை எனவும், இராணுவத்திடம் கேட்டுப் பாருங்கள் என்றார். அதன் பின்னர்தான், இராணுவத் தளபதிக்குத் தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தி, இவ்வாறானவர் இருக்கின்றாரா? எனக் கேட்டபோது, இராணுவத் தளபதி, இப்போது கூறமுடியாது. மீண்டும் அழையுங்கள் என்றார். இரண்டாவது முறை நான் அவரிடம் கேட்டபோது, அவ்வாறான ஒருவர் இருக்கின்றார் எனக் கூறினார். அதை விடுத்து, நான் எந்தச் சந்தர்ப்பத்திலும், எவரிடமும் அந்த நபர் தொடர்பில் எந்தவொரு அழுத்தமும் வழங்கவில்லை - என்றார்.

## யாழ். பல்கலையில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மேலதிக முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

மாணவ ஒழுக்காற்று அதிகாரி கடமை நிமித்தம் பல்கலைக்கழகத்தினுள் நடமாடிய அனைத்து இடங்களிலும் இன்று தொற்றுநீக்கி விசிறப்பட்டுள்ளமையுடன், மாணவ ஒழுக்காற்று அதிகாரி அலுவலகத்தில் பணிபுரியும் அனைவரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களிடம் இன்று காலை பி. சி. ஆர் பரிசோதனைக்காக மாதிரிகள் பெறப்பட்டுள்ளன. பரிசோதனை முடிவுகள் இன்று மாலை கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதேநேரம், கடந்த 8 ஆம் திகதி இடம் பெற்ற கூட்டம் ஒன்றில் குறித்த மாணவ ஒழுக்காற்று அதிகாரியும் கலந்து கொண்டிருந்ததால், அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களில் பலர் சுய தனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களில் பலர் கொரோனாத் தடுப்பூசி பெற்றுக் கொண்டவர்கள் எனினும், அவர்கள் அனைவரையும் கட்டங் கட்டமாகப் பி. சி. ஆர். பரிசோதனைக்கு உட்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

**மஞ்சள் கன்று விற்பனைக்கு**

1 1/2 மாத மஞ்சள் கன்று விற்பனைக்கு உண்டு. வீட்டிற்கு எடுத்து வந்து தரப்படும்.

தொடர்புகளுக்கு 021 492 7778

**இஞ்சி கன்று விற்பனைக்கு**

தரமான இஞ்சி கன்று விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு 021 492 7778

**விளம்பரத் தொடர்புகளுக்கு -**
மின்னஞ்சல் - kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம்- 076 443 8622

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# மஹிந்தரே மூலகாரணம்

ஜெனிவாவில் ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலின் சர்வதேசப் பொறிக்குள் இலங்கை மாட்டிக் கொண்டுள்ளது என்ற உண்மையைச் சுட்டிக்காட்டுகின்றார் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

ராஜபக்ஷ அரசின் மோசமான செயல்கள்தான் இப்படி மீண்டும் சர்வதேசப் பொறிக்குள் – நெருக்குவாரத்துக்குள் – இலங்கை சிக்கிக் கொள்ளக் காரணம் என்ற ரணிலின் கருத்து சரியானது தான்.

இலங்கை யுத்தத்தை ஒட்டிய விடயங்களை மட்டும் அல்ல, இலங்கை விவகாரத்தையே ஜெனிவாக் களத்துக்குள் முதன்முதலில் கொண்டு போனவர் மஹிந்த ராஜபக்ஷதான்.

1990களின் ஆரம்பத்தில் ஜனாதிபதி பிரேமதாஸவின் ஆட்சிக் காலத்தில் நாட்டில் அதிகார வர்க்கத்தினால் இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்களை முதன்முதலில் ஜெனிவாவுக்கு எடுத்துச் சென்றவர் இந்த மஹிந்த ராஜபக்ஷதான்.

எதிர்க்கட்சித் தரப்புப் பிரமுகராக இருந்தபோது மனித உரிமை மீறல்களுக்கு எதிராக இலங்கைத் தீவில் மிகமிக ஆக்ரோஷமாகச் செயற்பட்ட மனித உரிமைவாதி மஹிந்தர்தான்.

பன்னிரண்டு ஆண்டுகள் தாண்டி தாம் அதிகாரபீடத்துக்கு வந்த பின்னர் மனித உரிமை மீறல்களில் ஆக்ரோஷமாக ஈடுபட்ட தலைவரும் அவர்தான்.

ஜனாதிபதி பிரேமதாஸவின் காலத்தில் பத்திரிகையாளர் ரிச்சர்ட் டி சொய்ஸா கொல்லப்பட்டார். மனித உரிமைவாதிகள் இம்சிக்கப்பட்டனர். வடக்கு, கிழக்கில் மட்டுமல்ல, தெற்கிலும் ஜே.வி.பி.தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கை என்ற பெயரில் மனித உரிமைகள் மோசமாக மீறப்பட்டன.

அந்தக் காலத்தில் இப்போது போல மின்னஞ்சல்கள், மின்னியல் தகவல் பரிமாற்றம் போன்றவை இருக்கவில்லை. இங்கு இடம்பெற்ற அத்துமீறல்கள், அராஜகங்கள், அரச அட்டூழியங்கள், அரச பயங்கரவாதம் போன்றவை தொடர்பான படங்கள், சான்றாதாரங்கள், ஆவணங்கள் போன்றவற்றை நேரடியாகப் பிரதிகளாகவே வெளிநாட்டுக்கு எடுத்துச் செல்ல வேண்டும். அல்லது தபாலில் அஞ்சல் செய்ய வேண்டும். மின்னஞ்சல், வட்ஸ் அப், வைபர் போன்றவை மூலம் அனுப்பும் வசதிகள் எவையும் இருக்கவில்லை.

அப்படி இலங்கையில் நடைபெற்ற அட்டூழியங்கள் பற்றிய ஆவணங்கள், சான்றாதாரங்கள், சான்றுகளை இளம் எதிர்க்கட்சிப் பிரமுகராக ஜெனிவா மனித உரிமைகள் பேரவைக்கு எடுத்துச் செல்ல முயன்றார் இளம் எம்.பியான மஹிந்த ராஜபக்ஷ.

அதை அறிந்த பிரேமதாஸ அரசு அவரை கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வழி மறித்து, முழு ஆவணங்களையும் உருவி விட்டே ஜெனிவா செல்ல அனுமதித்தது. ஜெனிவாவில் அப்போதைய இலங்கை அரசின் உரிமை மீறல் நடவடிக்கைகளை விலாவாரியாக பகிரங்கமாக அம்பலப்படுத்தினார் மஹிந்த ராஜபக்ஷ.

ஆக, இலங்கை விடயத்தை ஜெனிவாவில் முதன்முதலில் கூப்பாடு போட்டு எடுக்க வைத்தவரே மஹிந்த ராஜபக்ஷதான்.

அதன் பின்னர்தான் இப்போது இலங்கையின் மனித உரிமை மீறல் விவகாரம் ஜெனிவா மனித உரிமைகள் கவுன்ஸிலில் தொடர்கதையாக எதிரொலிக்கின்றது.

இப்போது யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இலங்கையின் தரப்புகள் இழைத்த யுத்தக் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள் குறித்தெல்லாம் நீதி முறையான விசாரணைகளை நடத்தி, உண்மைகளைக் கண்டறிந்து, பொறுப்புக் கூறலை நிலைநாட்டி, இழப்பீடுகளை வழங்கி, மீள நிகழாமையை உறுதிப்படுத்த வேண்டும் என்ற விவகாரம் தீவிரமாகப் பேசப்படுகின்றது.

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இப்போது இந்த விவகாரம் எடுக்கப்படுவதற்கும் பிள்ளையார் சுழி போட்டவரும் மஹிந்த ராஜபக்ஷதான்.

2009 மேயில் இலங்கையில் யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட கையோடு, கொழும்புக்கு ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் விஜயம் செய்தார். அவரோடு கொழும்பில் தாம் விடுத்த கூட்டறிக்கை ஒன்றின் மூலம் இலங்கை விடயம் மீண்டும் ஜெனிவாவில் எடுக்கப்பட காரணமானார் மஹிந்த ராஜபக்ஷ.

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள் குறித்து விசாரணை நடத்துவதற்குத் தாம் இணங்குகின்றார் என அக்கூட்டறிக்கையில் தெரிவித்தார் அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

அதன் அடிப்படையிலேயே இலங்கை விடயத்தை ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலிடம் ஒப்படைத்தார் ஐ.நா. செயலாளர் நாயகம். அதன் விளைவையே – தொடர் நடவடிக்கைகளையே – கொழும்பு இப்போது சர்வதேச நெருக்குவாரமாக எதிர்கொள்கின்றது.

ஆக மொத்தத்தில், இலங்கை விவகாரம் முதலில் ஜெனிவாவுக்கு எடுத்துச் செல்லப்படுவதற்கும், இப்போதைய விடயத்தை ஜெனிவா தனது கவனத்தில் எடுத்துப் பரிசீலிப்பதற்கும் மஹிந்த ராஜபக்ஷதான் பிரதான காரணம்.

# நமது நாட்டுக்கு பொதுமன்னிப்பு ஒன்றும் புதிய விடயமே அல்ல!

## பிரதமருக்கு ஆனந்தசங்கரி கடிதம்



நமது நாட்டுக்குப் பொதுமன்னிப்பு என்பது புதிய விடயமல்ல எனப் பிரதமருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில், தமிழர் விடுதலை கூட்டணி செயலாளர் நாயகம் வீ.ஆனந்த சங்கரி தெரிவித்துள்ளார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு இன்று (புதன்கிழமை) அனுப்பி உள்ள கடிதத்திலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த கடிதத்தில் வீ.ஆனந்தசங்கரி மேலும் கூறியுள்ளவை வருமாறு –

கடந்த 2009 ஆம் ஆண்டு யுத்தத்தின் இறுதி நேரத்தில் யுத்த களத்தில், யார்? யார்? எப்படி? நடந்து கொண்டார்கள் என்று சரி, பிழைகளை ஆய்வு செய்வதற்கு அப்பால், யுத்தத்தை மேற்கொண்ட இரண்டு தரப்பினராலும் விரும்பத்தகாத அடிப்படை மனித உரிமை மீறல்கள் அதிகமாகவே நடந்துள்ளன என, நாம் அனைவரும் ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும்.

மேலும் யுத்தம், முடிந்த பின்னர் மீண்டும் தாங்களே ஜனாதிபதியாக தெரிவு செய்யப் பட்டீர்கள். அந்த நேரத்தில் நீங்கள் சுதந்திர தின உரையில் கூறியமை போல நடந்து கொள்வீர்கள் என எதிர்பார்த்தேன். ஆனால் அந்த கால கட்டத்தில் நான் எதிர்பார்த்தபடி நீங்கள் எதுவும் செய்யவில்லை.

இதேவேளை, தற்போதைய ஆட்சியில் தாங்கள் பிரதமராகவும் தங்கள் சகோதரர் ஜனாதிபதியாகவும் அரசாங்கத்தை தீர்மானிக்கும் சக்தியாக, உங்கள் குடும்ப உறுப்பினர்களை உள்ளடக்கியவாறு மிகவும் பலம் பொருந்திய ஒரு மனிதராகத் தாங்கள் திகழ்கின்றீர்கள்.

நீங்களும் உங்கள் குடும்ப உறுப்பினர்களும் நினைத்தால் ஒரே நாளில் எமது மக்கள் எதிர்நோக்குகின்ற பெரும்பாலான பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வைக் காணலாம்.

இதேவேளை, விடுதலைப் புலிகளின் கட்டளைத் தளபதிகளின் ஆணையை ஏற்று செயற்பட்டு, பல்வேறு உயிர்ச் சேதங்கள், பொருள் சேதங்களை ஏற்படுத்திய சிறையிலுள்ள விடுதலைப் புலி உறுப்பினர்கள் மிக நீண்ட காலமாக சிறையில் வாடுகின்றார்கள்.

ஆனால் விடுதலைப் புலிகளின் கட்டளைத் தளபதிகளான சி.சந்திரகாந்தன் (பிள்ளையான்) மற்றும் கருணா அம்மான் என்கின்ற வி.முரளிதரன் ஆகியோர் ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் கலந்து செயற்படுகின்றார்கள். இது போன்றே ஜே.வி.பி. கிளர்ச்சி மற்றும் இலங்கை இந்திய ஒப்பந்தம் போன்ற கால கட்டங்களில் பொது மன்னிப்பு பெற்று விடுதலையான மிகப்பெரிய குற்றங்களில் ஈடுபட்ட பலரும், ஜனநாயக அரசியலில் கலந்து நாடு முழுவதும் வலம் வருகின்றார்கள்.

இந்த நிலையில் யாரோ ஒருவரின் கட்டளைக்கமைய செயற்பட்டவர்கள் சிறையில் வாடுகின்றமை எந்த வகையிலும் நியாயப் படுத்த முடியாத செயலாகும். நமது நாட்டுக்கு பொது மன்னிப்பு என்பது புதிதான விடயமுமல்ல என்பதை நான் சொல்லி நீங்கள் அறிய வேண்டிய அவசியமில்லை.

இதேவேளை, இன்றைய அரசாவது உண்மையான பௌத்த கோட்பாடுகளை ஏற்றுக் கொள்வதாயின், அதன்படி ஆட்சி நடத்த வேண்டும் என நான் எதிர்பார்க்கின்றேன்.

அனைத்து இன மக்கள் மீதும் அன்புடனும், அமைதியுடனும், கருணையுடனும் நடந்து கொள்ளுங்கள். உண்மையில் பௌத்த தர்மத்தின் ஆட்சியை நீங்கள் நடத்த வேண்டுமானால், எல்லாவற்றையும் மறந்து, நான் பெரிது, நீ பெரிது என்று பாராமல், நம் நாடும் மக்களும் பெரிது என்று எண்ணி ஆட்சி நடத்தினால் நாம் அனைவரும் சமமாகவும், அன்பாகவும், நிம்மதியாகவும் வாழ முடியும்.

மேலும் நம் நாட்டு மக்களை சந்தோசமாக வாழ வைக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் உண்டு. – என அந்தக் கடிதத்தில் வீ. ஆனந்தசங்கரி குறிப்பிட்டுள்ளார்.

# மாகாண ஆட்சி முறைமைகளை கொண்டுவர இந்தியா முயற்சிக்கும்!

## யோகேஸ்வரன் நம்பிக்கை



மாகாண ஆட்சி முறையைக் கொண்டு வருவதற்கு இந்தியாவிற்கு கடமை இருக்கிறது. அதனை அந்நாடு செய்யும் என எதிர்பார்க்கின்றோம் என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்டம் – பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலய முன்றிலில் இடம் பெற்று வருகின்ற சுழற்சி முறையில் நடைபெறும் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில், நேற்று (செவ்வாய்க்கிழமை) மாலை சீனித்தம்பி யோகேஸ்வரனும் கலந்து கொண்டார்.

அதனைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். சீனித்தம்பி யோகேஸ்வரன் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

மாகாண ஆட்சி முறைமை தேவையில்லை என சிலர் சிந்திக்கின்றார்கள்.

மத்திய அரசின் ஆட்சி முறைமை இருக்கட்டும். பிரதேச சபை, மாநகர சபை, நகர சபையை பலப்படுத்தி விடுவோம் என நினைக்கின்றார்கள்.

ஆகவே இந்த அதிகாரங்களை பறிப்பதற்காகதான் பொலிஸ், இராணுவ அதிகாரங்களை கொண்டு வருகிறார்கள். ஆனாலும் இது செல்லுபடி அற்றதாக மாறும். ஏனெனில் இந்த மக்களுக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும். அதில் நாங்கள் மிக உறுதியாக இருக்கின்றோம்.

இது சர்வதேச ரீதியாகத் தீர்க்கப்பட்ட விடயம். இது தனி ஒரு நாட்டின் ஒப்பந்தம் அல்ல, சர்வதேச ஒப்பந்தமாகும். இந்தியாவும் இலங்கையும் செய்து கொண்டதுதான் இந்த ஒப்பந்தம்.

இந்த மாகாண ஆட்சி முறையைக் கொண்டு வருவதற்கு இந்தியாவிற்கு கடமை இருக்கிறது. மாகாண ஆட்சி முறைமையை கொண்டு வருவதோடு மாத்திரமல்லாது காணி அதிகாரம், நிதி அதிகாரம், பொலிஸ் அதிகாரங்களை பெற்றுக்கொடுக்க வேண்டியது இந்தியாவின் கடமை. அதனை இந்தியா செய்யும் என எதிர்பார்க்கின்றோம்.– என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஹிருணிகாவை கைதுசெய்ய நீதிமன்றம் உத்தரவு விடுப்பு!



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருனிகா பிரேமசந்திரவைக் கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இளைஞர் ஒருவரைக் கடத்த முயற்சித்த வழக்கின் விசாரணைக்கு நீதிமன்றில் முன்னிலையாகாத காரணத்தாலேயே அவருக்கு எதிராக இவ்வாறு பிடியாணை பிறப்பிக்கப் பட்டுள்ளது.

# சட்டப்பேரவை தேர்தலில் 174 தொகுதிகளில் தி.மு.க.

தமிழ்நாட்டில், 187 தொகுதிகளில், தி.மு.கவின் உதய சூரியன் சின்னத்தில் வேட்பாளர்கள் களம் காண உள்ளனர். இதில், திமுக மட்டும், 174 தொகுதிகளில் போட்டியிடுகிறது.

தமிழகத்தில் கூட்டணி கட்சிகளுடன் வெற்றிகரமாக, தொகுதி பங்கீட்டை, தி.மு.க. முடித்துள்ளது. அந்த கூட்டணியில், காங்கிரஸ் கட்சிக்கு 25 தொகுதிகளும், சி.பி.ஐ., சி.பி.எம்., விடுதலை சிறுத்தைகள், மதிமுக ஆகிய கட்சிகளுக்கு தலா 6 தொகுதிகளும் ஒதுக்கப்பட்டு, உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. இந்திய யூனியன் முஸ்லீம் லீக், கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி ஆகியவற்றிற்கு, தலா 3 தொகுதிகள் ஒதுக்கப்பட்டு, ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. மனிதநேய மக்கள் கட்சிக்கு 2 தொகுதிகளும், தமிழ்நாடு வாழ்வுரிமை கட்சி, மக்கள் விடுதலை கட்சி, ஆதித்தமிழர் பேரவை ஆகியனவற்றிற்கு தலா ஒரு தொகுதியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

மொத்தமுள்ள 234 தொகுதிகளில், 47 இடங்கள் தவிர, 187 இடங்களில், உதய சூரியன் சின்னத்தில் வேட்பாளர்கள் போட்டியிட உள்ளனர்.

இதில், 174 தொகுதிகளில், தி.மு.க. போட்டியிடுகிறது. கூட்டணியில் இடம்பெற்றுள்ள ம.தி.மு.க. 6 தொகுதிகளிலும், கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி 3 இடங்களிலும், தமிழக வாழ்வுரிமை கட்சி, மனித நேய மக்கள் கட்சி, மக்கள் விடுதலை கழகம், ஆதித்தமிழர் பேரவை ஆகியவை தலா ஒரு தொகுதியிலும் என 13 கூட்டணி வேட்பாளர்கள் உதய சூரியன் சின்னத்தில் போட்டியிடுகின்றனர்.

திமுக மற்றும் கூட்டணி கட்சிகள் போட்டியிடும் தொகுதிகள் எவை என்பது, புதன்கிழமைக்குள் இறுதி செய்யப்பட்டு, பட்டியல் வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. திமுக தேர்தல் அறிக்கையை 11ஆம் திகதி வெளியிடும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது.



## சட்டப்பேரவை தேர்தல் கூட்டணி அ.ம.மு.க. – தே.மு.தி.க. பேச்சு

அ.தி.மு.க. கூட்டணியில் இருந்து வெளியேறிய தே.மு.தி.க., அ.ம.மு.க. உடன் கூட்டணி பேச்சு நடத்தி வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

அ.தி.மு.க. கூட்டணியில் இருந்து வெளியேறுவதாக தே.மு.தி.க. நேற்று அதிகாரப்பூர்வமாக அறிவித்த நிலையில், சென்னை கோயம்பேட்டில் உள்ள தே.மு.தி.க. அலுவலகத்தில் அக்கட்சியின் பொருளாளர் பிரேமலதா விஜயகாந்த், துணைச் செயலாளர் சுதீஷ் மற்றும் பார்த்தசாரதி உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் இன்று தீவிர ஆலோசனையில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், தே.மு.தி.க. அவைத்தலைவர் டாக்டர் இளங்கோவன், அ.ம.மு.க. துணைப் பொதுச் செயலாளர் பழனியப்பனை சந்தித்து கூட்டணி பேச்சில் ஈடுபட்டதாக தகவல் வெளியாகியுள்ளது. இது தொடர்பான அதிகாரப்பூர்வ அறிவிப்பு இன்று மாலை அல்லது நாளை வெளியாக வாய்ப்புள்ளதாகவும் கூறப்படுகிறது.

## எதிர்க்கட்சிகள் தொடர் அமளி நாடாளுமன்றம் ஒத்திவைப்பு

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரின் இரண்டாவது அமர்வு நடைபெற்று வருகிறது. பெற்றோல், டீசல் விலை உயர்வு குறித்து விவாதிக்க கோரி எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் அவை நடவடிக்கை பாதிக்கப்படுகிறது.

இன்றும் இந்த விவகாரம் எதிரொலித்தது. பெற்றோல், டீசல் விலை உயர்வு மற்றும் விவசாயிகள் போராட்டம் குறித்து விவாதிக்கும்படி எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள் இரு அவைகளிலும் வலியுறுத்தினர். இதற்கு அனுமதி அளிக்கப்படாததால் உறுப்பினர்கள் கடும் அமளியில் ஈடுபட்டனர். இதனால் அடுத்தடுத்து அவை நடவடிக்கைகள் ஒத்திவைக்கப்பட்டன.

எனினும் உறுப்பினர்களின் அமளி நீடித்ததால், நாடாளுமன்ற இரு அவைகளும் 15 ஆம் தேதி வரை ஒத்திவைக்கப்பட்டது.



75வது சுதந்திர தின கொண்டாட்டத்தை முன்னிட்டு மக்களவையில் பிரதமர் மோடி அறிக்கை வெளியிட்டு உரையாற்ற விரும்பியதாகவும், அவையில் ஒருமித்த கருத்து இல்லாததால் அவர் இப்போது உரையாற்ற மாட்டார் என்றும் நாடாளுமன்ற விவகாரத்துறை மந்திரி பிரல்ஹாத் ஜோஷி கூறினார். ஒருமித்த கருத்து ஏற்பட்டதும் பிரதமர் உரையாற்றுவார் என்றும் அவர் கூறினார்.

## வேட்பு மனுத் தாக்கல் செய்தார் முதலமைச்சர் மம்தா பானர்ஜி



மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி நந்திகிராம் தொகுதியில் போட்டியிடுவதற்காக வேட்பு மனு தாக்கல் செய்தார்.

திரிணாமூல் காங்கிரஸ் கட்சித் தலைவர் மம்தா பானர்ஜி பவானிபூர் சட்டமன்றத் தொகுதியில் இருந்து இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டார். இம்முறை நந்திகிராமில் இருந்தும் போட்டியிடப்போவதாக அறிவித்தார்.

துணிச்சல் இருந்தால் நந்திகிராமில் மட்டும் போட்டியிட வேண்டும் என பா.ஜ.க. தலைவர்கள் சவால் விடுத்தனர். இதை ஏற்று நந்திகிராமில் இருந்து மட்டும் போட்டியிடுவதாக அறிவித்த மம்தா பானர்ஜி இன்று அதற்கான வேட்புமனுவைத் தேர்தல் அதிகாரியிடம் அளித்தார்.

மேற்கு வங்கத்தில் 8 கட்டங்களாகத் தேர்தல் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள நிலையில் மம்தா போட்டியிடும் நந்திகிராம் தொகுதியில் ஏப்ரல் முதல் நாளில் வாக்குப்பதிவு நடைபெற உள்ளது.

## மக்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்வேன்: முதல்வராக தேர்வான திரத் சிங் ராவத் பேட்டி

உத்தரகண்ட் முதல்வராக இருந்த திரிவேந்திர சிங் ராவத் (60) தனது பதவியை நேற்று ராஜினமா செய்தார். மாநில பா.ஜ.கவில் அவர் மீதான அதிருப்தி அதிகரித்ததால், கட்சியின் மத்திய தலைமையின் உத்தரவின் பேரில் அவர் பதவி விலகியதாக கூறப்பட்டது.

புதிய முதல்வரைத் தேர்வு செய்வதற்காக மாநில பா.ஜ.க. எம்.எல்.ஏக்கள் கூட்டம் தலைநகா டேராடூனில் உள்ள கட்சி அலுவலகத்தில் இன்று காலை 10 மணிக்கு நடைபெற்றது. இதில் பா.ஜ.க.



எம்.பி.திரத் சிங் ராவத் புதிய முதல்வராக தேர்வு செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று மாலை 4 மணிக்கு முதல்வராக திரத் சிங் ராவத் பதவியேற்றார்.

முன்னதாக செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்த திரத் சிங் ராவத், எனக்கு இந்த பொறுப்பு கிடைக்கும் என கற்பனை கூட செய்தது இல்லை. உத்தரகாண்ட் மக்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யும் வகையில் நான் செயல்படுவேன் என நம்புகிறேன். என் மீது நம்பிக்கை வைத்த பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷா மற்றும் மத்திய தலைமைக்கு நன்றி கூற கடமைபட்டுள்ளேன் என்றார்.

## மோடி அரசு நீடிக்கும் வரை எமது போராட்டம் தொடரும்

### விவசாய சங்கத் தலைவர் தெரிவிப்பு



மோடி அரசு நீடிக்கும் வரை போராட்டத்தைத் தொடர விவசாயிகள் தயாராக உள்ளதாக விவசாய சங்கத் தலைவர் நரேந்திர திகாயத் தெரிவித்துள்ளார்.

புதிய விவசாய சட்டங்களைத் திரும்பப் பெறக்கோரி விவசாயிகள் நடத்தும் போராட்டம் நூறு நாள்களைத் தாண்டித் தொடர்ந்து வருகிறது. இந்நிலையில் பாரதிய கிசான் யூனியனைச் சேர்ந்த நரேந்திர திகாயத் செய்தியாளர்களிடம் பேசினார். இது போன்ற போராட்டங்களை மத்திய அரசு இதுவரை கண்டதில்லை என்றும், இந்தப் போராட்டத்தைப் பல்வேறு உத்திகளைப் பின்பற்றி ஒடுக்கிவிடலாம் என அரசு தவறாகக் கருதிவிட்டதாகவும் தெரிவித்தார்.

எந்த வகையிலும் போராட்டத்தை ஒடுக்க முடியாது என்றும், கோரிக்கைகளை நிறைவேற்றாவிட்டால் இந்த அரசு நீடிக்கும் வரை தங்கள் போராட்டம் தொடரும் என்றும் நரேந்திர திகாயத் கூறினார்.

## தலைமை தேர்தல் கமிஷனருக்கு கொரோனாத் தடுப்பூசி

தலைநகர் டெல்லியில் உள்ள தேர்தல் ஆணைய தலைமையகமான 'நிர்வாச்சன் சதனில்' பணிபுரியும் அதிகாரிகள், ஊழியர்களுக்கு கொரோனாத் தடுப்பூசி போடும் பணி கடந்த 4 ஆம் திகதி தொடங்கியது. முதல் நபராக, முன்னாள் தலைமை தேர்தல் கமிஷனர் எம்.எஸ்.கில் தடுப்பூசி போட்டுக்கொண்டார்.

இந்நிலையில், தலைமை தேர்தல் கமிஷனர் சுனில் அரோரா, தேர்தல் கமிஷனர்கள் சுஷில் சந்திரா, ராஜீவ் குமார் ஆகியோர் நேற்று முதல் 'டோஸ்' கொரோனா தடுப்பூசி போட்டுக் கொண்டனர்.

5 மாநிலங்களில் நடைபெறவிருக்கும் சட்டப்பேரவைத் தேர்தலில் பணியாற்றும் அனைத்து ஊழியர்களும் முன்களப் பணியாளர்கள் என்று சமீபத்தில் அறிவித்த தலைமை



தேர்தல் கமினர் சுனில் அரோரா, தேர்தல் பணிக்கு முன்னதாக அவர்களுக்கு தடுப்பூசி செலுத்தப்படும் என்று தெரிவித்தார். தடுப்பூசி போடுவது, அவர்களை அச்சமின்றி தேர்தலில் பணியாற்ற வைக்கும் என்று அவர் கூறினார்.

5 மாநிலங்களில் தேர்தல் பணியாற்றும் அலுவலர்களுக்கான சிறப்பு தடுப்பூசி திட்டத்தின்கீழ், லட்சக்கணக்கானோருக்கு தடுப்பூசி போடப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# ஹாரி – மேகனின் இனப் பாகுபாடு குற்றச்சாட்டு; இங்கிலாந்து ராணி – குடும்பத்தினர் வருத்தம்



இங்கிலாந்து இளவரசர் சார்லஸ் – டயானா தம்பதியின் 2 ஆவது மகன் இளவரசர் ஹாரி. இவர் அமெரிக்க நடிகையான மேகனை காதலித்து கடந்த 2018 ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்டார்.

இதற்கிடையே இங்கிலாந்து அரச குடும்பத்தினர் அதிகாரம் மீது பற்று இல்லாமல் ஹாரி – மேகன் இருந்தனர்.

இதனால் அரச குடும்பத்தின் மூத்த உறுப்பினர்கள் பொறுப்பில் இருந்து விலகுவதாக அறிவித்தனர். அவர்கள் 2 வயது மகன் ஆர்ச்சியுடன் அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் வசித்து வருகிறார்கள். தற்போது மேகன் 2 ஆவது முறையாக கர்ப்பமாக உள்ளார்.

இந்த நிலையில் பிரபல தொலைக்காட்சியில் புகழ்பெற்ற நிகழ்ச்சி தொகுப்பாளர் ஒப்ரா வின்பிரே நடத்திய நேர்காணலில் ஹாரி – மேகன் பங்கேற்று பேட்டி அளித்தனர்.

இளவரசர் ஹாரி, அவரது மனைவி மேகன் மார்க்கல் அப்போது பல்வேறு குற்றச்சாட்டுகளை மேகன் கூறினார்.

குறிப்பாக இங்கிலாந்து அரச குடும்பத்தினர் இன பாகுபாட்டுடன் நடந்து கொண்டனர் என்று கூறினார்.

இது தொடர்பாக அவர் கூறும்போது, 'எங்கள் மகன் கறுப்பாக பிறந்து விடுவானோ என்று இங்கிலாந்து அரச குடும்பத்தினர் கவலை அடைந்தனர். எனது பிள்ளைக்கு பாதுகாப்பு கிடைக்காது இளவரசர் பட்டம் கிடைக்காது என்ற பேச்சுக்கள் எழுந்தன.

கலப்பின பெண்ணான எனக்கு பிறந்த தால், மகன் ஆர்ச்சிக்கு இளவரசர் பட்டம் மறுக்கப்பட்டது' என்றார். இது பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இந்த நிலையில், இங்கிலாந்து ராணி எலிசபெத் சார்பில் பக்கிங்காம் அரண்மனை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:–

சில ஆண்டுகளாக ஹாரி மற்றும் மேகன் எவ்வளவு சவாலாக இருந்து வந்துள்ளனர் என்பதை முழு குடும்பமும் அறிந்து வருத்தப்படுகிறார்கள். எழுப்பப்பட்ட பிரச்சினைகள், குறிப்பாக இனம் தொடர்பானது போன்றவை மிகவும் தீவிரமாக எடுத்து கொள்ளப்படும். அவை அனைத்தும் குடும்பத்தினரால் தனிப்பட்ட முறையில் ஆலோசிக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

# துனிசியாவில் 2 படகுகள் கவிழ்ந்து விபத்து: 39 அகதிகள் கடலில் மூழ்கி உயிரிழப்பு!



துனிசியாவில் அகதிகள் வந்த 2 படகுகள் எதிர்பாராத விதமாக நடுக்கடலில் மூழ்கியதில் 39பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

மத்திய தரைக்கடல் பகுதியை கடந்து இத்தாலியில் உள்ள Lampedusa தீவுக்கு படகுகள் மூலம் ஏராளமான அகதிகள் சென்றுள்ளனர். அவர்கள் சென்ற படகுகள் துறைமுக நகரமான Sfax அருகே திடீரென கடலில் மூழ்கி விபத்துக்குள்ளானது.

இதுபற்றி தகவல் அறிந்த துனிசியா பாதுகாப்பு அமைச்சக அதிகாரிகள் மீட்பு படகில் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று கடலில் தத்தளித்த 165 அகதிகளை பத்திரமாக மீட்டனர். மாயமானவர்களைத் தேடும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

# மெக்சிக்கோவில் பேரணி வன்முறை பொலிஸ் உட்பட 80 பேர் படுகாயம்



உலகம் முழுவதும் நேற்று முன்தினம் சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்பட்டது.

இதையொட்டி மெக்சிகோவில் பெண்களுக்கு எதிராக அதிகரித்து வரும் வன்முறைகளை தடுக்க நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி தலைநகர் மெக்சிக்கோ சிட்டியில் ஆயிரக்கணக்கான பெண்கள் திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மெக்சிக்கோ சிட்டியின் மையப்பகுதியில் திரண்ட பெண்கள் அதிபர் மாளிகையை நோக்கி பேரணியாக சென்றனர்.

இதற்கிடையில் போராட்டக்காரர்கள் அதிபர் மாளிகைக்குள் நுழைந்திடாத வண்ணம் அதிபர் மாளிகையின் முன்பு பொலிஸார் இரும்பு சுவரை அமைத்தனர். மேலும் அதிபர் மாளிகையை சுற்றிலும் பெண் பொலிஸார் பாதுகாப்புக்காக குவிக்கப்பட்டனர். இந்த நிலையில் அதிபர் மாளிகையை நெருங்கிய போராட்டக்காரர்கள் சுத்தியல், மரக்கட்டைகள் உள்ளிட்டவற்றால் இரும்பு சுவரை தகர்த்து கீழே தள்ள முயற்சித்தனர்.

பெண் பொலிஸார் அவர்களை தடுக்க முயன்றதால் இரு தரப்புக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. சற்று நேரத்தில் இந்த மோதல் பெரும் வன்முறையாக வெடித்தது. போராட்டக்காரர்களை விரட்டியடிக்க பொலிஸார் தடியடி நடத்தியதோடு கண்ணீர் புகை குண்டுகளையும் வீசி எறிந்தனர்.

அதேபோல் போராட்டக்காரர்கள் கையில் கிடைத்த பொருள்களை பொலிஸார் மீது வீசி எறிந்து தாக்குதலில் ஈடுபட்டனர்.

இந்த மோதலில் பெண் பொலிஸ் அதிகாரிகள் 62 பேரும், போராட்டக்காரர்கள் தரப்பில் 19 பெண்களும் படுகாயமடைந்தனர். அவர்கள் அனைவரும் அருகில் உள்ள மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# பைடன் நிர்வாகத்தை எதிர்த்து 12 மாகாண அரசுகள் வழக்கு



பாரீஸ் பருவநிலை ஒப்பந்தத்தில் அமெரிக்கா மீண்டும் இணைந்தது தொடர்பாக ஜனாதிபதி ஜோ பைடன் நிர்வாகத்துக்கு எதிராக 12 மாகாண அரசுகள் வழக்கு தொடர்ந்துள்ளன.

சர்வதேச அளவில் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ள புவிவெப்பமயமாதலை கட்டுப்படுத்த உலக நாடுகள் முயற்சி எடுத்து வருகின்றன.

புவிவெப்ப மயமாதலை 2 டிகிரி செல்சியஸிக்கு மீறாமல் கட்டுப்படுத்துவதற்கான பருவநிலை மாற்றம் தொடர்பான ஒப்பந்தம் கடந்த 2015 ஆம் ஆண்டு பாரீஸில் நடந்த கூட்டத்தின்போது முடிவு எட்டப்பட்டது.

வரலாற்று சிறப்புமிக்க இந்த பாரிஸ் பருவநிலை ஒப்பந்தத்தில் ஒபாமா ஆட்சியின் கீழ் அமெரிக்கா முதல் நாடாக இணைந்தது. ஆனால் அதன் பின்னர் ஆட்சி பொறுப்புக்கு வந்த ட்ரம்ப், இந்த ஒப்பந்தம் வளரும் நாடுகளுக்கு ஆதரவாக இருப்பதாக குற்றம் சாட்டினார்.

இதனை காரணம் காட்டி கடந்த 2017 ஆம் ஆண்டு பாரீஸ் பருவநிலை ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா விலகுவதாக அவர் அறிவித்தார்.

அதனைத்தொடர்ந்து 2019 ஆம் ஆண்டின் இறுதியில் இந்த ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா முறைப்படி வெளியேறியது.

இந்த நிலையில், அமெரிக்காவில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தலில் ஜோ பைடன் வெற்றி பெற்று ஜனாதிபதியானார்.

அவர் தனது தேர்தல் பிரசாரத்தின் போதே, தான் ஜனாதிபதியானால் பாரிஸ் பருவநிலை ஒப்பந்தத்தில் அமெரிக்கா மீண்டும் இணையும் என உறுதி அளித்தார்.

அதன்படியே அமெரிக்காவின் 46 ஆவது ஜனாதிபதியாக பதவியேற்ற முதல் நாளிலேயே பாரிஸ் பருவநிலை ஒப்பந்தத்தில் அமெரிக்கா மீண்டும் இணைவதற்கான நிர்வாக உத்தரவில் ஜோ பைடன் கையெழுத்திட்டார்.

அதனைத்தொடர்ந்து கடந்த மாதம் 19 ஆம் திகதி பாரிஸ் பருவநிலை ஒப்பந்தத்தில் அமெரிக்கா முறைப்படி மீண்டும் இணைந்தது.

இந்தநிலையில் பாரிஸ் பருவநிலை ஒப்பந்தத்தில் மீண்டும் இணைந்ததன் மூலம் அமெரிக்காவுக்கு பெரிய அளவில் பொருளாதார இழப்பு ஏற்படும் என கூறி ஜனாதிபதி ஜோ பைடன் நிர்வாகத்தின் மீது 12 மாகாண அரசுகள் கூட்டாக வழக்கு தொடர்ந்துள்ளன. மிசோரி மாகாணத்தில் அட்டர்னி ஜெனரல் எரிக் ஸ்மித் தலைமையில் ஆர்கன்சாஸ், அரிசோனா, இண்டியானா, கன்சாஸ், மென்டோனா, நெப்ராஸ்கா, ஓஹியோ, ஒக்லஹோமா, தெற்கு கரோலினா, டென்னிசி மற்றும் உட்டா ஆகிய மாகாணங்களின் அட்டர்னி ஜெனரல்கள் ஒன்றிணைந்து இந்த வழக்கை தொடர்ந்துள்ளனர்.

இதுகுறித்து மிசோரி அட்டர்னி ஜெனரல் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் "பாரிஸ் பருவநிலை ஒப்பந்தத்தில் மீண்டும் இணைவதற்கான ஜோ பைடன் நிர்வாகத்தின் உத்தரவு அமெரிக்க பொருளாதாரத்தின் ஒவ்வொரு அம்சத்தையும் பாதிக்கும். வரவிருக்கும் 10 ஆண்டுகளில் நூற்றுக்கணக்கான பில்லியன் அல்லது டிரில்லியன் டொலர் சேதத்தை ஏற்படுத்தும். இது அமெரிக்காவின் ஒவ்வொரு குடும்பத்தையும் பாதிக்கும்" எனக் கூறப்பட்டுள்ளது.

ஜோ பைடன் ஜனாதிபதியாக பதவியேற்ற பிறகு அவரது நிர்வாகத்துக்கு எதிராக மாகாண அரசுகள் தொடர்ந்துள்ள வழக்கு இது என்பது குறிப்பிடத்தக்கது.

# ஈகுவடோரியல் கினியா வெடி விபத்து பலி எண்ணிக்கை 98 ஆக உயர்வு

மத்திய ஆபிரிக்க நாடான ஈகுவடோரியல் கினியாவின் பாட்டா நகரில் ராணுவ ஆயுத கிடங்கில் டைனமைட் என்ற வெடிபொருள் திடீரென தொடர்ச்சியாக வெடித்தது. இந்த சக்தி வாய்ந்த குண்டு வெடிப்பில் சிக்கி 20 பேர் உயிரிழந்ததாக அந்நாட்டு சுகாதார அமைச்சகம் முன்பு தெரிவித்திருந்தது.

இந்நிலையில், இந்த வெடி விபத்தில் சிக்கி உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 98 ஆக அதிகரித்துள்ளது. அதேபோல் படுகாயமடைந்தவர்கள் எண்ணிக்கை 615 ஆக உயர்ந்துள்ளது. அவர்களுக்கு மருத்துவமனைகளில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

முன்னதாக டைனமைட் வெடிபொருளை பயன்படுத்தும்பொழுது பாதுகாப்பு வியங்களை கவனத்தில் கொள்ளவில்லை என கினியா அதிபர் டியோடோரா ஓபியாங் தெரிவித்திருந்தார்.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# வடமேற்கிலிருந்து கிழக்குக்கு சமாதான விருத்தி யாத்திரை!

நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான பல்வேறு வேலைத் திட்டங்களை தேசிய சமாதானப் பேரவை முன்னெடுத்து வருகின்றது.

இந்த வேலைத்திட்டங்களின் ஓர் அங்கமாக, ‘வட மேற்கிலிருந்துகிழக்குநோக்கி’சமயத்தலைவர்களினது சமாதான யாத்திரை, அம்பாறை - அக்கரைப்பற்றை நேற்று சென்றடைந்தது.

தேசிய சமாதான பேரவையின் அனுசரணையில், அட்டாளைச்சேனை சர்வமத குழு மற்றும் றுஹூனு லங்கா அமைப்பு ஆகியன இணைந்து இந்த சமாதான யாத்திரையை ஏற்பாடு செய்திருந்தன.

தேசிய சமாதான பேரவையின் நிகழ்ச்சித்திட்ட ஒருங்கிணைப்பாளர் எம்.யூ.உவைஸ் மதானி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பேரவையின் ஆலோசகர் சுமாது வீரவர்ண, திட்ட உத்தியோகத்தர் எஸ். வத்சலா மற்றும் சர்வமதக் குழுவின் தலைவர் எஸ்.ஹாசிம், றுஹூனு லங்கா அமைப்பின் பணிப்பாளர் எஸ்.ஜவ்பர் மற்றும் சமயத் தலைவர்கள், சிவில் அமைப்புக்களின் பிரதி நிதிகள் இதில் கலந்துகொண்டனர்.

இதன்போது, சமயத்தலைவர்களுக்கிடையிலான கருத்துப்பரிமாறல்கள் நடைபெற்றதுடன், இரு குழுவினர்களுக்கிடையிலான சமய, கலை, கலாசாரம், பாரம்பாரியம் தொடர்பிலான அறிமுகமும் நடைபெற்றன.



மத சகவாழ்வுக்கான கூட்டு ஈடுபாடு மற்றும் ஏனையவர்களுடன் சகோதரத்துவத்தை பகிர்ந்து கொள்ளல் போன்றனவை மூலம் இலங்கையில், பன்மைத்துவ சமுதாயத்தை வலுவூட்டுவதுடன் தேசத்தின் அமைதிக்கும் என்றும் பாடுபடுவோமென இதன்போது வலிறுத்தப்பட்டு, இலங்கையின் மாதிரிப் படத்தில் அனைத்து இன மக்களினாலும் அமைதி, சமாதானத்தை கட்டியயெழுப்பும் வகையில் தீபம் ஏற்றி வைக்கப்பட்டது.

# மட்டக்களப்பில் துப்பாக்கி மீட்பு!



மட்டக்களப்பு, வவுணதீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொத்தியாபுளை பகுதியில் துருப்பிடித்த நிலையில் இருந்த ரி56 ரக துப்பாக்கி ஒன்றை நேற்று முன்தினம் மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொத்தியாபுளை கிராமத்தில் வாழ்கின்ற சுமார் 412 குடும்பங்களுக்கு குடி தண்ணீர் வழங்கும் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது .

இந்த நீர் வழங்கும் திட்டத்துக்கு வடிகால்கள் தோண்டும் நடவடிக்கையில் ஊழியர்கள் ஈடுபட்டிருந்த வேளையில் மேற்படி துப்பாக்கி இருப்பதை அவதானித்துள்ளனர் என வவுணதீவு பொலிஸாருக்கு தெரிவித்துள்ளனர் .

அதனைத் தொடர்ந்து குறித்த இடத்துக்கு வருகை தந்த வவுணதீவு பொலிஸார், துப்பாக்கியை மீட்டுள்ளனர்.

# சுபீட்சத்தின் நோக்கு செயற்திட்டத்தில் எந்திரவியல் திரவிய ஆய்வுகூடம் திறப்பு

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சுபீட்சத்தின் நோக்கு சௌபாக்கிய திட்டத்தின் கீழ் கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபையின் அம்பாறை மாவட்டத்துக்கான எந்திரவியல் திரவிய பரிசோதனை ஆய்வு கூட மாவட்டக் காரியாலயம் திறந்து வைக்கப்பட்டுள்ளது

இந்த நிகழ்வு அட்டாளைச்சேனை பலநோக்கு கூட்டுறவு சங்க கட்டடத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபையின் தவிசாளர் ஜெ.ஜெனார்த்தனன் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது

மக்களின் நலன் கருதி, அரசாங்கத்தால் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்கொண்டு செல்லப்படுகின்றது.



அந்த வகையில், கிழக்கு மாகாணத்திலும் கொவிட் -19 தொற்றுக்கு மத்தியிலும் தொடர்ச்சியாக மக்களுக்கான சேவைகள் முன்கொண்டு செல்லப் படுகின்றன.

இதுபோன்ற அபிவிருத்தித் திட்டங்களை முன்கொண்டு செல்வதற்கு நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து, ஒரே கொள்கையுடன் பயணிக்க வேண்டும். அப்போதுதான் எமக்கான அபிவிருத்திகளைப் பெற முடியும்.

அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்களுக்கு, வீடு மற்றும் மலசலக் கூடங்களை கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபை நிர்மாணித்துக் கொடுத்துள்ளது. என நிகழ்வில் கலந்துகொண்ட கிழக்கு மாகாண ஆளுநர் தனது சிறப்புரையில் தெரிவித்தார்.

# அம்பாறை திருக்கோவிலில் காளான் அறுவடை நிகழ்வு



அம்பாறை திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட காயத்திரி கிராமத்தில் முதற்தடவையாக இரு இளைஞர்களால் மேற்கொள்ளப்பட்டு வந்த காளான் உற்பத்தியின் அறுவடைநிகழ்வுநேற்றுசெவ்வாய்க்கிழமைஇடம்பெற்றுஇருந்தது.

இந்தநிகழ்வு தம்பிலுவில் விவசாய விரிவாக்கல் பிரிவின் விவசாய போதனாசிரியர் எஸ்.பிரேம்நாத் தலைமையில் காயத்திரி கிராமத்தில் இடம்பெற்றது.

இதன்போது விவசாய விரிவாக்கல் நிலைய உத்தியோகத்தர்களால் காளான் உற்பத்தி தொடர்பாக இளைஞர் யுவதிகளுக்கு தெளிவூட்டல்கள் வழங்கப்பட்டு இருந்தோடு வைபவ ரீதியாக காளான் அறுவடை நிகழ்வும் இடம்பெற்று இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இருநூறு வருடங்கள் பழைமையான கத்தி மாயம்

நோர்வூட் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பொகவந்தலாவ லெச்சுமி தோட்டம் கீழ் பிரிவு ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலயத்தில் வைக்கப்பட்டிருந்த சுமார் 200 வருடம் பழைமை வாய்ந்த கத்தி ஒன்று காணாமல் போனமையால் குறித்த தோட்டப் பகுதியில் பதற்றநிலை ஏற்பட்டுள்ளதோடு தோட்ட தொழிலாளர்கள் தொழிலுக்கு செல்லாது பணி பகிஷ்கரிப்பிலும் ஈடுபட்டுள்ளனர்

இந்த சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. குறித்த தோட்டப்பகுதியில் உள்ள ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் வருடாந்த தேர்த் திருவிழா தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்ற போது இந்த ஆலயத்தில் உள்ள பழைமை வாய்ந்த கத்தி ஒன்று காணாமல் போனமை தொடர்பில் பொதுமக்கள் கேள்வி எழுப்பிய போது ஆலய நிர்வாகத்திற்கும் பொது மக்களுக்கும் இடையில் அமைதியின்மை ஏற்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து நோர்வூட் பொலிஸ் நிலையத்திற்கு சென்ற தோட்டப் பொது மக்கள் கத்தி காணாமல் போனமை தொடர்பில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டமைக்கு அமைய குறித்த தோட்டப்பகுதிக்கு விரைந்த நோர்வூட் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளமையோடு சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் எட்டு பேரைக் கைது செய்துள்ளனர்.

அண்மையில் மஸ்கெலியா சாமிமலை பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றில் இடம்பெற்ற பூஜை ஒன்றுக்காக குறித்த கத்தி சாமிமலை பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டு மீண்டும் ஆலயத்துக்கு கொண்டுவரப்படவில்லை எனவும் அந்தக் கத்திக்கு பதிலாக வேறு ஒரு கத்தியை ஆலயத்துக்கு ஒப்படைக்கப்பட்டதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை நோர்வூட் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சடலங்களை அடக்கம் செய்வதற்கு காணிகளை தெரிவு செய்ய தீர்மானம்

கொரோனாத் தொற்றால் உயிரிழப்போரின் சடலங்களை அடக்கம் செய்வதற்குரிய காணிகளை தெரிவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறான இடங்கள் தொடர்பாக விரைவாக அறிவிக்குமாறு அனைத்து மாவட்ட செயலாளர்களுக்கும் தெரியப்படுத்தியுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்,வைத்தியர்அசேலகுணவர்தனதெரிவித்துள்ளார்.

கொரோனாத்தொற்றால்உயிரிழப்போரின்சடலங்களை அடக்கம் செய்ய பரிந்துரைக்கப்பட்டுள்ள விடயங்களுக்கு அமைய, பொருத்தமான காணியைத் தெரிவு செய்யுமாறே அறிவிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

சடலங்களை அடக்கம் செய்வதற்காக கிழக்கு மாகாணத்திலுள்ள மற்றுமோர் இடம் தற்போது பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக வைத்தியர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

பரிந்துரைக்கப்பட்டுள்ள இடம் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளோரை அடக்கம் செய்வதற்குரிய இடமா என்பது தொடர்பில் ஆராயப்படவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

மட்டக்களப்பு - ஓட்டமாவடி, சூடுபத்தினசேனையில் இதுவரையில் 30 இற்கும் மேற்பட்டோரின் சடலங்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், வைத்தியர் அசேல குணவர்தன குறிப்பிட்டுள்ளார்.

# நேற்று மட்டும் ஓட்டமாவடியில் ஏழு ஜனாஸாக்கள் நல்லடக்கம்

கொரோனாவால் மரணமடைந்தவர்களின் ஜனாஸாக்கள் ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் நல்லடக்கம் செய்யும் நிகழ்வு ஐந்தாவது நாளாகவும் நேற்று இடம்பெற்றது பிற்பகல் 04 மணிவரை ஏழு ஜனாஸாக்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளன என ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச்.எம்.தாரிக் தெரி வித்தார்.

இதில் ஐந்து ஆண்களும் இரண்டு பெண்களது ஜனாஸாக்களுமாக ஏழு ஜனாஸாக்கள் நேற்று செவ்வாய்க் கிழமைஅடக்கம்செய்யப்பட்டுள்ளமையுடன் இவர்கள் சாய்ந்தமருது, தர் ஹா டவுன், திருகோணமலை, வெள்ளவத்தை, மாவனல்லை பிரதேசத்தை சேர்ந்தஒருஜனாஸாவும்அக்குறனை பிரதேசத்தை பிரதேசத்தை சேர்ந்த இரண்டு ஜனாஸாக்களும் ஓட்டமாவடி பிரதேசசெயலாளர் பிரிவில் உள்ள கொரோனாத்தொற்றால் மரணிக்கும் ஜனா ஸாக்களைநல்லடக்கம்செய்யும் மைய வாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இதற்கமைய ஐந்து நாள்களில் முப்பத்தெட்டு ஜனாஸாக்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளன என ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச்.எம்.தாரிக் மேலும் தெரிவித்தார்

# ஈஸ்டர் தாக்குதல் சூத்திரதாரிகளுக்கு நடவடிக்கை எடுக்க சர்வதேசத்தின் உதவியை நாடவேண்டும்!

## எதிர்க்கட்சி வலியுறுத்தல்



2019 ஈஸ்டர் தாக்குதலின் முக்கிய சூத்திரதாரிகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க சர்வதேச சமூகத்திடம் உதவி கோரவேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

ஆட்சி கவிழ்ப்பு நடவடிக்கை காரணமாக ஈஸ்டர் தாக்குதலுக்கு வழிவகுத்த காலத்தில் இரண்டு அரசாங்கங்கள் இருந்தன என அந்தக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

மேலும் தாக்குதல்கள் தொடர்பான உளவுத்துறை தகவல்களை இந்தியா முன்னரே வழங்கியதாக அவர் குறிப்பிட்டார்.

இந்தசம்பவத்துடன்தொடர்புடையவர்களை தூக்கு மேடைக்கு அனுப்பவேண்டுமானால், சர்வதேச சமூகத்தின் உதவியை நாட வேண்டும் என்றும் வஜிர அபேவர்தன குறிப்பிட்டுள்ளார்.

# கொரோனா குணமடைவு 83 ஆயிரத்தை தாண்டியது!

நாட்டில் கொரோனாத் தொற்றில் இருந்து குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 83 ஆயிரத்து 210 ஆக அதிகரித்துள்ளது.

கடந்த 24 மணிநேரத்தில் மேலும் 457 பேர் குணமடைந்துள்ள நிலையில் இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை கொரோனாத் தொற்று உறுதியானோரின் மொத்த எண்ணிக்கை 86 ஆயிரத்து 343ஆக காணப்படுகின்றது.

அவர்களில் 2 ஆயிரத்து 622 பேர் தொடர்ந்தும் சிகிச்சைபெற்றுவரும் நிலையில் 511 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நோயாளருக்கான சகல சிகிச்சை நடவடிக்கைகளும் ஆரம்பம்!

## யாழ்.போதனா பதில் பணிப்பாளர் தெரிவிப்பு



யாழ். போதனா வைத்தியசாலையில் நோயாளர்களுக்கான சகல சிகிச்சைகளும் வழங்கப்பட்டு வருகின்றன என வைத்தியசாலை பதில் பணிப்பாளர் வைத்தியர் சண்முகநாதன் சிறிபவானந்தராஜா தெரிவித்துள்ளார்.

நேற்று (செவ்வாய்க்கிழமை) யாழ்.போதனா வைத்தியசாலையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அவர், தொற்று நீக்கல் நடவடிக்கையைத் தொடர்ந்து அனைத்து சிகிச்சைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டார்.

தொற்று உறுதியான வைத்தியரும் சிகிச்சை முடித்து ஒய்வில் உள்ளார் என்றும் அடுத்த வாரம் மீண்டும் தனது கடமைகளை பொறுப்பேற்கவுள்ளார் என்றும் அவர் கூறினார்.

அதேவேளை நோயாளர்களைப் பார்வையிட ஒருவருக்கே அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும் இந்த நடைமுறை தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என்றும் வைத்தியர் சண்முகநாதன் சிறிபவானந்தராஜா குறிப்பிட்டார்.

மேலும் பார்வையாளர்கள் பார்வையிட வருகின்றமையைத் தவிர்க்க வேண்டும் என்பதே தமது கோரிக்கையாகவிருப்பதாகவும் வைத்தியர் சண்முகநாதன் சிறிபவானந்தராஜா தெரிவித்துள்ளார்.

# ஈஸ்டர் தாக்குதல் பின்னணியில் கோட்டாவா? குற்றம் சுமத்துவோர் மீது விசாரணை ஆரம்பம்

## பொலிஸ் அழைத்தும் ஆஜராகாத அசோக அபேசிங்க எம்.பி.

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்களை நடாத்தியவர்கள், அதற்கு நிதி உதவி அளித்தவர்கள் தொடர்பில் குருணாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அசோக அபேசிங்க வெளியிட்ட கருத்து தொடர்பில் சி.ஐ.டி.விசாரணைகளை ஆரம்பித்துள்ள நிலையில், நேற்று செவ்வாய்க்கிழமை 2 ஆவது நாளாகவும் அவர் விசாரணைக்கு சமுகமளிக்கவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதுதொடர்பாகப்பொலிஸ்தலைமையகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது செய்தியாளர்கள், பொலிஸ் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் றோஹணவிடம் கேள்வி எழுப்பிய போது -

ஆம், அவருக்கு 2 ஆவது தடவையாக குற்றவியல் சட்டத்தின் 109 (6) ஆம் அத்தியாயத்தின் கீழ் அறிவித்தல் விடுக்கப்பட்டது. ஆனால் அவர் விசாரணைக்கு வரவில்லை.

விசாரணைக்கு வராமைக்கு நியாயமான காரணங்கள் இல்லை எனில், விசாரணைக்கான அழைப்பை புறக்கணித்தமை தொடர்பிலும் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கலாம்.

தற்போது அவர் தொடர்பில் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன என்பது தொடர்பில் விசாரணையாளர்கள் ஆராய்ந்து தீர்மானம் எடுப்பர்' எனத் தெரிவித்தார்.

அண்மையில் குருணாகல் பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றின் போது உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் அசோக அபேசிங்க, ரணில் விக்கிரமசிங்க செய்த தவறு மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் காரணமாகவே 2015 இல் அமைத்த ஆட்சி கவிழ்ந்தது.

அதாவது மத்திய வங்கி பிணைமுறி மோசடி மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலே ஆட்சி கவிழ காரணமானது. உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணியில் கோட்டா - பஸில் ஆகியோரே உள்ளனர். அந்தத் தாக்குதலுக்கான நிதி உதவியை அளித்தவர் நிஸங்க சேனாதிபதி எனக் குறிப்பிட்டிருந்தார்.

இதனையடுத்து கடந்த ஞாயிற்றுக் கிழமை ஆளும் கட்சியைச் சேர்ந்த உதயன கிரிந்திகொட, பிரமித்த பண்டார தென்னகோன், சஞ்ஜீவ எதிமான்ன, மதுர விதானகே, ஜகத் குமார சுமித்ர ஆரச்சி, மிலான் ஜயதிலக ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் சி.ஐ.டிக்கு முறைப்பாடளித்திருந்தனர்.



அசோக அபேசிங்க எம்.பி. நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தும் வண்ணமும், இனங்களுக்கு இடையே குழப்பத்தை தோற்றுவிக்கும் வண்ணமும் கருத்து வெளியிட்டுள்ளார் எனவும், நாட்டின் தலைமை மீது பொது மக்களுக்கு நம்பிக்கையை இழக்கச் செய்யும் வகையில் சதி செய்துள்ளார் எனவும் அந்த முறைப்பாட்டில் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சி.ஐ.டி. பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரசாத் ரணசிங்கவின் மேற்பார்வையில் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் நிசாந்த சொய்ஸாவின் ஆலோசனைக்கமைய இது தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

# 185 இலங்கையர் நாடு திரும்பினர்!

வெளிநாடுகளில் நிர்க்கதிக்குள்ளாகியிருந்த மேலும் 185 இலங்கையர்கள், நாடு திரும்பியுள்ளனர்.

மத்திய கிழக்கு நாடுகளுக்கு சென்றிருந்த இலங்கையர்களே இவ்வாறு நாடு திரும்பியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை நாட்டில் கடந்த 24 மணித்தியாலத்தில் 14 விமான சேவைகள் ஊடாக 978 பேர், நாடு திரும்பியுள்ளனர் எனக் கட்டுநாயக்க விமான நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த காலப்பகுதியில் ஜேர்மன், போலந்து, ஆஸ்திரேலியா, எகிப்து, பிலிப்பைன்ஸ், நெதர்லாந்து, யுக்ரேன் ஆகிய நாடுகளில் இருந்து 72 வெளிநாட்டவர்கள் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர் எனவும் கூறப்படுகின்றது.

# அரசியல் பழிவாங்கல் ஆணைக்குழு குறித்து பொன்சேகா மேன்முறையீட்டு நீதிமன்றில் மனு!



அரசியல் பழிவாங்கல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை இரத்து செய்யுமாறு கோரி நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ரிட் மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளார்.

குறித்த மனுவில் பிரதிவாதிகளாக அரசியல் பழிவாங்கல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் தலைவர், உறுப்பினர் சந்திரசிறி ஜயதிலக்க மற்றும் ஆணைக்குழுவின் செயலாளர் ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.

அத்துடன், ஆணைக்குழுவின் பரிந்துரைகள் நீதிக்கு முரணாக வெளியிடப்பட்டுள்ளதாகவும் சரத் பொன்சேகா சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், குறித்த ஜனாதிபதி ஆணைக் குழுவால் தமது உரிமைகள் மீறப்பட்டுள்ளன என நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தனது மனுவில் தெரிவித்துள்ளார்.

# ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட ஹெலிக்கொப்டர்கள் தொடர்பாக நாடாளுமன்றில் சூடான விவாதம்!

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு விமானப் படையால் வழங்கப்பட்ட ஹெலிக்கொப்டர்கள் தொடர்பாக இன்று (புதன்கிழமை) நாடாளுமன்றத்தில் சூடான விவாதம் இடம்பெற்றது.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹேஷ விதானகே மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷ ஆகியோர், ஜனாதிபதிக்கு வழங்கிய சேவைகள் குறித்து கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

மேலும் குறித்த காலகட்டத்தில் சில சுற்றுப் பயணங்களில் ஜனாதிபதிக்கு இரண்டு ஹெலிக்கொப்டர்கள் ஏன் வழங்கப்பட்டன என்றும் அவர் கேள்வியெழுப்பினார்.

அதேவேளை தேர்தலின் போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரச சொத்து பயன்பாட்டைக் குறைப்பதாக உறுதியளித்தார் எனவும், ஜனாதிபதி இதுவரை தனது பதவிக் காலத்தில் இதுபோன்ற மாற்றங்களைச் செய்திருக்கிறாரா என்றும் அவர் கேள்வியெழுப்பினார்.

குறித்த கேள்விகளுக்கு பதிலளித்த இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷ, பாதுகாப்புக் காரணங்களுக்காக ஜனாதிபதிக்கு இரண்டு ஹெலிக்கொப்டர்கள் வழங்கப்பட்டுள்ளன எனக் கூறினார்.

மேலும் வீதிகளில் பயணிக்கும்போது ஜனாதிபதி மூன்று வாகனங்களுடன் மட்டுமே பயணிக்கிறார் என்றும் கடந்த காலத்தைப்போன்று பெரிய வாகனப் பேரணியுடன் அல்ல என்றும் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை பழைய பாரம்பரிய நடைமுறைகளைத் திருத்துதல் மற்றும் பாதுகாப்பு தொடர்பான பல கொள்கை



மாற்றங்களை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ செய்துள்ளார் என்றும் இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.03.2021இல் வெளியிடப்பெற்றது.